ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# இயல் சாத்து
## (மணவாள மாமுனிகளால் நியமிக்கப் பெற்றது)

### பிள்ளை உறங்காவில்லி தாசர் அருளிச் செய்தது

நன்றும் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும் *
ஒன்றும் குறை இல்லை ஓதினோம் * - குன்றம்
எடுத்தான் அடி சேர் இராமானுசன் தாள்*
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி

### வகுளாபரண பட்டர் அருளிச் செய்தது

வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை *
வாழி திருமல்லி வள நாடு * - வாழி
சுழி பொறித்த நீர்ப் பொன்னித் தென்னரங்கன் தன்னை *
வழி பறித்த வாளன் வலி

### ஸ்ரீ பராங்குச தாசர் அருளிச் செய்தது

திருநாடு வாழி திருப்பொருநல் வாழி *
திருநாட்டுத் தென்குருகூர் வாழி * - திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி * வாழி சடகோபன்
இட்டத் தமிழ்ப் பாவிசை

### பரகால தாசர் அருளிச் செய்தது

மங்கை நகர் வாழி வண் குறையலூர் வாழி *
செங்கை அருண்மாரி சீர் வாழி * - பொங்கு புனல்
மண்ணித்துறை வாழி * வாழி பரகாலன்
எண்ணில் தமிழ்ப் பாவிசை

### பிள்ளை இராமானுச தாசர் அருளிச் செய்தது

வாழியரோ தென் குருகை வாழியரோ தென் புதுவை *
வாழியரோ தென்குறையல் மாநகரம் * - வாழியரோ
தக்கோர் பரவும் தடம் சூழ் பெரும்பூதூர் *
முக்கோல் பிடித்த முனி

## திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்தது

மொழியைக் கடக்கும் பெரும் புகழான் * வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின் **
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ் பாடி அல்லா
வழியைக் கடத்தல் * எனக்கினியாதும் வருத்தமன்றே

## பிள்ளை அழகிய மணவாள தாசர் அருளிச் செய்தது

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும் *
வஞ்சக் குறும்பின் வகை அறுத்தேன் * மாய வாதியர் தாம்
அஞ்சப் பிறந்தவன் சீமாதவன் அடிக்கன்பு செய்யும் *
தஞ்சத்தொருவன் சரணாம் புயம் என் தலைக்கணிந்தே

## பின்பழகராம் பெருமாள் சீயர் அருளிச் செய்தது

ஊழி தொறும் ஊழி தொறும் உலகம் உய்ய உம்பர்களும் கேட்டுய்ய * அன்பினாலே
வாழி எனும் பூதம் பேய் பொய்கை மாறன் மழிசையர் கோன் பட்டர் பிரான் மங்கை வேந்தன் *
கோழியர் கோன் தொண்டர் துகள் பாணன் கோதை குல முனிவன் கூறிய நூலோதி * வீதி
வாழி என வரும் திரளை வாழ்த்துவார் தம் மலர் அடி என் சென்னிக்கு மலர்ந்த பூவே

## இயல் சாத்து ஸம்பூர்ணம்